விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 பங்குனி 20 ஜ ஆகிர் 7 இதழ் 49

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 2—4—82

இந்து மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு

## யாழ்ப்பாணத்தில் சிறப்பான வரவேற்பளிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அகில உலக இந்து மகாநாட்டுக்குவரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு யாழ்ப்பாணத்தில் சிறப்பான வரவேற்பளிக்கப்படவிருக்கிறது

இதுசம்பந்தமான ஆலோசனை மகாநாடு யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெற்றது. யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள், யாழ். அரசாங்க அதிபர் உட்பட யாழ். செயலக அதிகாரிகள், யாழ். மாவட்டத்திலுள்ள இந்து சமயப்பிரமுகர்கள், ஆலய தர்மகர்த்தாக்கள் ஆகியோர் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் வரும் வெளி

(8ம் பக்கம் பார்க்க)

# குட்டிமணி, ஜெகன் மீண்டும்

# ராணுவ பாதுகாப்பில்

(கொழும்பு)

**பொலிஸ் கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கில் றிமாண்டில் வைக்க கொழும்பு மேல் நீதிமன்றத்தினுல் உத்தரவிடப்பட்ட சந்தேகநபர்களான குட்டிமணியும், ஜெகனும் உடனடியாகவே பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் ராணுவத்தினரால் பனுகொடை இராணுவத் தடுப்புமுகாமிற்கு மீண்டும் கொண்டுசெல்லப்பட்டனர்.**

மேற்குறித்த இரு எதிரிகளையும் நீதிமன்றத்தின் பொறுப்பில் விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. டியூடர்டி அல்விஸ் உத்தரவிட்டிருந்தார். ஆனுல் பயங்கரவாத (புதியதிருத்த) தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் குட்டிமணியும், ஜெகனும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பேரில் ராணுவப் பாதுகாப்பில் மீண்டும வைக்கப்பட்டனர். (இ)

பேச்சுவார்த்தை நீடித்தால்

## "விடுதலை உணர்வு மழுங்கிப் போகும்"

### தங்கத்துரை கருத்து

[யாழ்ப்பாணம்]

''அரசாங்கத்துக்கும் எமக்கும் இடையே நடைபெறும் உயர்மட்டப் பேச்சுவார்த்தை நீடித்துக் கொண்டு போவதால் தமிழீழ விடுதலை உணர்வு மழுங்கிப்போவதாக இளைஞர்கள் சந்தேகிக்கிறுர்கள்; பேச்சுவார்த்தையில் தமிழீழம் தரமாட்டார்கள். முதல்படியாக ஏதாவது வழி செய்யப்படவேண்டும்'' என்று திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. அ. தங்கத்துரை, யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவாலயத்துக்கு அஞ்சலிசெலுத்திப் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த நினைவாஞ்சலிக் கூட்டம் தந்தை செல்வா அறங்காவல் குழுத் தலைவர் திரு. கு. நேசையா தலைமையில் நடைபெற்றது.

திரு. தங்கத்துரை மேலும் பேசுகையில், 'ஐ. தே. கட்சியுடனும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுடனும் தந்தை செல்வா ஒப்பந்தங்கள் செய்தும் பயனில்லை என்று உணர்ந்தபின்புதான் போராட்டங்களை நடாத்தினுர். தொடர்ந்தும் தலைவர்கள் நடாத்தும் பேச்சுவார்த்தை அதிக காலம் நீடிக்கக் கூடாது'' என்றுவலியுறுத்தினுர்.

**விலகிச் செல்கிறேம்**

போராட்டங்கள் நடத்தாததால் விடுதலைப் பாதையிலிருந்து விலகிச் செல்கிறேம் என்று மக்கள் மத்தியிலும் தப்பபிப்பிராயம் தோன்றியுள்ளது என்று குறிப்பிட்ட திரு. தங்கத்துரை, நாங்கள் உண்மையான பாதையிலிருந்து விலகிக் கொண்டுபோகிறேம். தலைவர்கள் மக்களுடைய எண்ணத்தை உணர்ந்து சுதந்திரம் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்காக எந்தத்தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறேம் என்றுர்.

(8ம் பக்கம் பார்க்க)

காந்திய இயக்கம் கொள்கை விளக்கப்

**பொதுக்கூட்டம்**

இடம்:— யாழ்/றிம்மர் மண்டபம்

காலம்:— 3.4.82 சனி காலை 9-30 மணி

தலைவர்:— ச.அ.டேவிற் தலைவர் காந்திய இயக்கம்

சிறப்புரை:— டாக்டர் சோ. இராசசுந்தரம்

(அமைப்புச் செயலாளர் காந்திய இயக்கம்)

அகதிகள் கிராமங்களின் செய்திப்படங்களும் காண்பிக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறேம்.

காந்தியம் யாழ். மாவட்டம் 2731

தொண்டமானின் வவுனியா விஜயம்:

## அகதிகள் பிரச்னையை தீர்ப்பதாக உறுதி

(வவுனியா)

கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் வவுனியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை நேற்று மேற்கொண்ட போது அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

வவனியா செயலக வாயிலில் வைத்து வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் அமைச்சருக்கு மாலை சூட்டி வரவேற்றுர்.

வவனியா செயலகத்தில் நடைபெற்ற மகாநாட்டில் வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், வவனியா மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எம். சிற்றம்பலம், மற்றும உயரதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டு பலவிடயங்கள குறித்து அமைச்சருடன் விரிவாக ஆராய்ந்தனர்.

இம்மகாநாட்டில் முக்கியமாக மலையகத்திலிருந்து வவனியாவுக்கு அகதிகளாக வந்து குடியேறியுள்ள 2860 குடும்பங்களில் 900 குடும்பங்

(8 பக்கம் பார்க்க)

## 36,000 ரூபா கொள்ளை!

### சிறுப்பிட்டியில் துப்பாக்கி இளைஞர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

பயங்கர ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தி 36,000 ரூபா கொள்ளைஅடிக்கப்பட்டுள்ளது.

சிறுப்பிட்டி - நீர்வேலியைச் சேர்ந்த திருமதி சத்தியலோகநாயகி என்பவரது வீட்டிலேயே இக்கொள்ளைச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

துப்பாக்கி, மற்றும் கிறிஸ் கத்தி போன்ற ஆயுதங்களுடன் வந்த இளைஞர்கள், வீட்டுக்காரரைப்பயமுறுத்தி வீட்டு அறையொன்றில்விட்டு பூட்டிவிட்டு தாலிக்கொடி உட்பட 34 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகளையும், 2,000 ரூபா ரொக்கப்பணத்தையும் கொள்ளைஅடித்துக் கொண்டு காரொன்றில் ஏறிச் சென்றதாக சுன்ருகம் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

சுன்ருகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரன் தலைமையில், குற்றத்தடுப்பு பிரிவு சப்இன்ஸ்பெக்டர் எஸ் சிவராசா, பொலிஸ் கான்ஸ்டபிள்கள் எஸ். கந்தசாமி, ரி. குணசிங்கம் ஆகியோர் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து இது வரை எவரும் கைதுசெய்யப் படவில்லை. (மா-ம)

பெட்ரோல் நிலையக் கொள்ளை

## சந்தேகநபர் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதி

(மாவிட்டபுரம்)

புன்ருலைக்கட்டுவன் பெட்ரோல் நிலையக்கொள்ளை தொடர்பாக றிமாண்டிலிருந்த சந்தேகநபர் 1000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

புன்ருலைக்கட்டுவன் பெற்ரேல் நிலையத்தில் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி அங்கிருந்த 1400 ரூபா பணத்தையும் பெற்ரேல் நிலைய மனேஜரான பெண்மணியின்

(8-ம் பக்கம் பார்க்க)

இராணுவ நடவடிக்கைபற்றி

## காந்தீயப் பண்ணையினர் யாழ் நகரில் கூடி விளக்குவர்

(யாழ்ப்பாணம்)

வவனியா காந்திய விவசாயப் பண்ணைகளில் இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து உண்மை நிலையை விளக்கும் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை யாழ் றிம்மர் மண்டபத்தில் காந்திய இயக்கத்தலைவர் திரு. ச. அ. டேவிட் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

அண்மைக்காலங்களில் காந்தீய விவசாயப் பண்ணைகளில் இராணுவத்தினர் சோதனையிட்டு காந்தீயத் தொண்டர்களைக் கைதுசெய்ததும் காந்தீயத் தலைமையகத்தையும் அமைப்புச் செயலாளர் இல்லத்தையும் இராணுவம் பொலிஸ் சுற்றி வளைத்துச் சோதனையிட்டு அங்கிருந்து முக்கிய கோவைகள், ஆவணங்கள், படங்கள் ஆகியவற்றை எடுத்துச் சென்றதுடன் அமைப்புச் செயலாளர் இருமுறை இரகசியப்பொலிசாரினுல் நீண்டநேர விசாரணைக்குட்படுத்தப்பட்டதும் தெரிந்ததே

இக்கூட்டத்தில் காந்தீய இயக்க அமைப்புச் செயலாளர் டாக்டர் எம். இராசசுந்தரம், சிறப்புரையாற்றுவார்.

வவனியாவில் குடியேறியுள்ள அகதிகளின் வாழ்க்கை முறைகள் பற்றிய செய்திப் படமும் இங்கு காண்பிக்கப் படவிருக்கிறது. (மா)

**மணிவாக்கு**

உன் வறுமை வழிப்பிரயாணிபோல் வரும். உன் தேவையோ ஆயுதபாணியாக வரும்.

—பைபிள்

# நமது நோக்கு

## கலைப்பட்டதாரிகள் ஆசனம்: கம்பளம்

கம்பளம் கிடைப்பது இன்று அரிதினும் அரிது; பாயிலேயே உட்காரவேண்டுமென்பதை அறியாதார் இலர். வைபவத்திற்கு அழைப்புப்பெற்றவர் 'நாஷனல்' (சுயபாஷை) உடையில் தக்கமுறையில் செல்லுவதே உசிதம்.

கால்சட்டை, சப்பாத்து போடவேண்டிய விருப்பம் அல்லது நிர்ப்பந்தம் உண்டானல் அவர்கள் புறக்கணிக்கப்படுவதில்லை. ரகசியமாக பந்தலுக்கப்பால் உள் மண்டபத்தில் சில கதிரைகள் மறைவில் காத்திருக்கும். இது இன்றைய வழக்கம்.

கலைப்பட்டதாரிகள்தான் இந்தக் கம்பளக்காரர். சுயபாஷையில் படித்ததற்கு சன்மானம் குறைந்த சம்பளம்; விஞ்ஞான பட்டதாரிகளுக்கும் ஆங்கிலம் கல்வி, கணிதபாடங்களை பட்டப் படிப்புக்கு எடுத்தவர்களுக்கும் கூடிய சம்பளம்.

நம்ப முடியுமா? ஆம்! விக்டர் தென்னக்கோன் சம்பள பரிசிலனைக்குழு உருவாக்கிய இந்த வேறுபாட்டை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. 'ஆங்கில' அரசாங்கம் அல்லவா இது?

பட்டதாரி ஆசிரியர்கள் இரு பிரிவுகளாக—'சிகரட்; சுருட்டு'—என்று பிரிக்கப்பட்டு அவர்களுக்கு இரு வகைப்பட்ட சம்பளம் வழங்கப்படுகிறது.

கூடிய சம்பளம்:
ரூபா 12360 / 6 X 240; 5 X 360 — 15,600/=

குறைந்த சம்பளம்:
11400 /— 4 X 180; 9 X 240 — 14,280/=

பண்டைய ஆசிரிய சம்பளச் சிக்கல்களின் வரலாறு அறியாதவர்களுக்கு இது ஒரு விபரீதமாகவும் வியப்பை அளிக்கும் செய்தி போலவும் தோன்றும்.

சில வருடங்களுக்கு முன் இவ்வித தடுமாற்றம் ஏற்பட்டு பின்பு கைவிடப்பட்டது. இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதற் துணைவேந்தரான சேர் ஐவர் ஜென்னிங்ஸ்விடுத்தகோரிக்கைகளின்படி விஞ்ஞான ஆசிரியர்கள் தட்டுப்பாடு பெருமளவில் நிலவி வந்ததால் விஞ்ஞான பட்டதாரிகளுக்கும் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்களுக்கும் கூடிய வேதனமளித்து அவர்களை ஆசிரிய சேவையில் கவரவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கெதிரான குரல்கள் வலிமை பெற்றதனல் அப்பாகுபாடு இடைநடுவில் கைவிடப்பட்டது.

கலைப்பட்டதாரிகளுக்கும் விஞ்ஞான பட்டதாரிகளுக்கும் வேறுபாடு, உண்டென்பதை நாம் மறுக்கவில்லை. ஆனல் அவ்வித வேறுபாடு சம்பளப் பாகுபாட்டுக்கு இடமளிக்கப் படாதென்பதே எமது வாதம்.

பல்கலைக்கழகப் பட்டம் என்றால்; அதன் விபரங்கள் என்னவானலும், பட்டதாரிகள் ஒரேவிதமாகமதிக்கப் படவேண்டியவர்கள். காலத்துக்குக்காலம், பட்டதாரிகள் போதனு பாடங்களுக்கு கிராக்கி வேறுபடும்; ஐம்பதுவருடங்களுக்கு முலண்டன் கலைப்பட்டதாரி என்றால், என்ன மதிப்பு! விஞ்ஞான பட்டதாரிகள் அந்த நிலைக்கு அக்காலம் எட்டவில்லை. ஆயினும் சம்பள வேறுபாடு எப்பவும் இருந்ததில்லை.

கலை, விஞ்ஞானம் என்ற வித்தியாசத்தைவிட இன்னெருமோசமான காரணம் தென்படுகின்றது. விஞ்ஞான பட்டதாரிகள் ஆங்கிலத்தில் பயின்றவர்கள்; மற்றவர்கள் சுயபாஷையில் பயின்றவர்கள்; 'சூற்' அணிந்திருப்பவர்க்கு 'சிகரட்டும்' வேட்டி கட்டினவர்க்குச் சுருட்டும் வைபவங்களில் வழங்கப்படுவது சர்வசாதாரணம் வேட்டிசால்வையுடன் போனல் சிகரெட் இழக்கும் ஆபத்து. என்ன மடமை உடைவேறுபாட்டால் தாங்கள் விரும்பிப் பிடிக்கும் 'புகை' கிடைப்பதில்லையே எத்தனை காற்சட்டைக்காரர் யாழ்ப்பாணச் சுருட்டுக்கு அடிமையாகின்றனரென்பது தெரியாதா?

சம்பள பரிசிலனைச்சபை இவ்வித சாதாரண மனப்போக்கில் இந்த வேறுபாட்டை வரவழைத்து கல்வியின் மூலாதாரக் கொள்கைக்கு 'மண்போடுகின்றது' பட்டதாரிகளுக்கு—பட்டப்படிப்புக்கு ஆங்கில அறிவு அவசியம். அதனை ஒரு கட்டாய பாடமாக்கி அதில் பரீட்சை வைத்து அவ்வித அறிவுடையவரே எந்தப்பட்டத்துக்கும் உரித்தானவர் என்றொரு திருத்தம் செய்யலாம். சில பல்கலைக்கழகங்கள் அந்த முறையை அனுட்டிக்கின்றன.

காரணம் ஆங்கில அறிவின்றி ஆராய்ச்சிக்கெட்டிய, ஆராய்ச்சிக்குரிய படிப்பு எப்பாடத்திலும்—தமிழிலும்—நடத்துவது இன்று இயலாத காரியம்.

அது அவ்வாருக சுயபாஷையில் படித்துப் பட்டம்பெற்றவர். சிலகுறிப்பிட்டபாடங்களைப் படித்தவர்கள் அவர்களின் வேதனத்தைக் குறைக்கின்ற போது அது இழக்கமான பட்டம்என்று சாதாரணமாகக் கருதப்படும் சம்பளமே இன்று மதிப்பின் சின்னம்.

காலகதியில் உயர்கல்வி எல்லாநிலையிலும் இயன்றளவில் தாய்மொழியில் பயிலவேண்டுமென்ற குறிக்கோளை வடயம் விளங்கிய கல்விமான்கள் ஆட்சேபிக்கார். அது அவ்வாருயின் சுயபாஷைக்குரிய நடைமுறை மதிப்பு குறைந்த வேதனத்தால் கேலிக்குரியதாகும்.

அரசியல் ரீதியில் பார்த்தால் இந்தப்பாகுபாடு அரை மணித்தியாலம் நின்று பிடிப்பது அரிது.

சிங்களப்பட்டதாரிகள் சும்மாவிடுவார்களா? ஆங்கிலமே வேண்டாமென்று ஒருகாலம் ஆர்ப்பாட்டம் செய்தனரல்லவா? அரசமொழியாகிய சிங்களம் இவ்வாறு சீர்கெட அவர்கள் வாளாவிருப்பார்களா?

எந்தவருடத்தில் இவ்வித நாடகம் நடக்க முடியுமாஞலும் இவ்வருடத்தில் இது நிலைத்து நிற்காது.

# அங்கவீனர்களுக்கு அருஞ்சேவை

[இன்று பி. ப. 5மணிக்கு கைதடி நவீலட் பாடசாலை மாணவர்களுக்காக ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும் அதனுடன் சேர்ந்த உபகரணங்களும் அன்பளிப்புச் செய்யப்படுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.]

**- நிர்மலாதேவி கணேசலிங்கம் -**

இன்று ஒரு சிறந்த தொலைபேசி இயக்குநராக இருப்பவர் ஒரு அங்கவீனர் ஆவார், இலங்கை வானொலி ஒலிபெருக்கி கூட்டுத்தாபனத்தின் ஒரு சிறந்த அறிவிப்பாளராக கடமையாற்றுபவர் ஒரு அங்கவீனர் ஆவார். இன்று அங்கவீனம் உற்றோர் பலர் சிறந்த தொழில்பார்த்து பெருவாழ்வு வாழுகின்றனர். இதற்கெல்லாம் காரணம் அங்கவீனர்களை நல்முறைப்படுத்தி அவர்களும் எல்லோரையும் போல வாழவேண்டும் என்ற பெரிய மனம் கொண்டோரே ஆவார், அரசாங்க சிறு உதவிகளை எதிர்பார்த்து இருக்கும் இவர்களுக்கு உதவிசெய்ய முன்வரும் தனிப்பட்டவர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அங்கவீனர்களுக்கான பாடசாலைகள் இலங்கையில் பல இடங்களிலும், அரசாங்க செலவிலும, தனியார் செலவிலும் நடைபெற்று வருகின்றன. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கைதடியிலுள்ள நவீல்ட் பாடசாலை ஒரு சிறந்த இடத்தை வகிப்பதாக இருக்கின்றது. கண்பார்வை இழந்தோரும், காது கேட்கும் தன்மை அற்றோரும் எழுதவும், வாசிக்கவும் இவ் உலகத்தை நுகரவும் பழகுகிறார்கள் இதற்கு வேண்டிய வசதிகள் இப்பாடசாலையில் இலவசமாக உண்டு. மேலும் அவர்களை கவனமாகவும், கருத்துடனும் பராமரிக்கும் விடுதி வசதிகள் உண்டு. இவர்களுக்கு கல்வி கற்பிக்கச் சிறந்த ஆசிரியரும், அதிபரும் செயற்படுகின்றனர் கல்வி கேள்விகள் மாத்திரம் அல்ல, அவர்கள் தொழில் நுட்பமுறையிலும் தம்மைத் தயார்படுத்தி இன்று பலஇடங்களிலும் தொழில் செய்கின்றார்கள். அங்கு படித்த மாணவர்கள் சிலர் பல்கலைக்கழகத்தில் படிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். பட்டதாரிகளாகி வெளியேறி இருக்கிறார்கள். சிறந்த வேலைவாய்ப்பைப் பெற தகுதி உடையவர்களாய் இருக்கின்றார்கள் எனவே அங்கவீனர்களை வீட்டில் பூட்டி வைத்திருக்கும் நிலை இன்று மாறிவருகின்றது.

இதற்கான காரணம் யாதெனில் அங்கவீனர்களுக்கான கல்வியூட்டல் முறையின் முன்னேற்றமாகும். மேல்நாடுகளைப் போன்று கண்பார்வை அற்றோருக்கும், கண்பார்வை சிறிதளவு உள்ளோருக்கும் சிறந்த முற்போக்கான உபகரணங்களைக்கொண்டும், சிறந்த ஆசிரியர்களைக்கொண்டும், கல்விபுகட்டபடுகின்றதுதாமாகவே எழுதி வாசிக்கக்கூடிய பிறெயில் தட்டச்சு (Braille) இயந்திரம் மூலமாகவும், உருப்பெருக்கும் வில்லையின் மூலமாகவும், சாதாரண தட்டச்சு மூலமாகவும், மணநுகர்ச்சிப் புத்தகங்கள் மூலமாகவும், சீனக்கட்டைகள் மூலமாகவும், வேறு தட்டுகள் மூலமாகவும் அவர்கள் கல்விபயிலும் முறைகள் ஒரு சிறந்த முறையாகக் கருதப்படுகின்றது. ஊசிக்குள் நூலைக் கோப்பதும் சொன்னவற்றை அப்படியே தட்டு இயந்திரத்தின்மூலம் போட்டுக்காட்டுவதும், மேலும் இன்னோரன்ன கல்வி முறைகளையும் அண்மையில் நடந்தேறிய வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினல் யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சியிலே சிறந்த காட்சியாக அமைந்திருந்தது. இங்கு குறிப்பிடத்தக்கது.

அங்கவீனர்களுக்குச் செய்யும் தொண்டு சிறந்ததொண்டாகும். சேவைகள் சிறந்த சேவை. அவர்கள் மனம்குளிர்ந்தால் அதுவே நாம் செய்யும் சிறந்த ஆக்கம் ஆகும். இதை மனதில் கொண்டுபருத்தித்துறை லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினரான பட்டயக் கணக்காளர் திரு. அ. சோமசுந்தரப்பிள்ளை 197? ம் ஆண்டு வானொலிப் பெட்டி இரண்டை நவீல்ட் பாடசாலைப் பிள்ளைகளுக்கு அன்பளிப்புச் செய்தார். உலக விவகாரங்களையும், நாட்டு நடத்தையையும் சங்கீதம், உபநியாசம் சொற்பொழிவு, நாடகம் ஆகியவற்றைக் கேட்டு இரசிப்பதற்கு கண்பார்வை அற்றோருக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதைத் தொடர்ந்து அங்குள்ள மற்றைய அங்கவீனர்கள் குறிப்பாக கண்பார்வை உள்ளோர் பார்த்து இரசிக்கக் கூடியவாறு ஒரு தொலைக்காட்சிப்பெட்டியும் அதனுடன் சேர்ந்த உபகரணங்களையும் அன்பளிப்புச் செய்ய மறுபடியும் திரு.சோமசுந்தரம்பிள்ளை முன்வந்தார். இவருக்கு வைத்திய கலாநிதி யோகு பசுபதி (யாழ்ப்பாண லயன்ஸ் கழகம்) சட்டத்தரணி சி. மகேசன் யாழ்ப்பாண லயன்ஸ் கழகம்) பிரபல வர்த்தகர்கே. தவராஜசிங்கம்(சாவகச்சேரி லயன்ஸ் கழகம்) முன்வந்தனர். இத்தொலைக்காட்சிப் பெட்டியை இவர்கள் சார்பில் திருமதி சித்திரலேகா அவர்கள் ஏப்ரல் 2ம் திகதி பி ப 5மணிக்கு நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கு கையளிக்க இருக்கிரா. அன்பர்கள், ஆதரவாளர்

7ம் பக்கம் பார்க்க)

# விசுவமடு அகதிகளும் அவர்கள் படும்பாடும்

1977ம் ஆண்டு ஆகஸ்ட்மாத கலவரத்தால் சொத்திழந்து வாழவழியற்று வந்த 200குடும்பங்களுக்கு, குடும்பத்திற்கு இரண்டு ஏக்கர் வீதம் யானை. காட்டெருமை, பன்றி வாழும் காட்டில் அரசாங்கக் காணி வழங்கப்பட்டது. முதன் முதலாக இக் குடும்பங்களை நானகு பகுதிகளாக கூடாரங்களில் அமர்த்தப்பட்டன. காணிகளுக்கு போவதற்கு அடிபாதையும் இல்லை. காடு வெட்ட கத்தி, கோடரி, மண்வெட்டி ஆகிய ஆயுதமுமில்லை.படுக்கப் பாய், சாபபிட உணவு இல்லாத குடும்பங்கள் எப்படி காடு வெட்டி, கட்டைபிடுங்கி விவசாயம் செய்வது.

நேர்முகமாக இவைகளைக் கண்டு துக்கமடைந்த யாழ்ப்

**மக்கள் கருத்து**

பாண அரசாங்க அதிபர் திரு லால் விஜயபால, தனது மாவட்ட காணி உத்தியோகத்தர் திரு. மெக்போலுக்கு உணவு ஆயுதம் உடனடியாக வழங்கும்படி ஆணையிட்டார். பாவம் இரண்டு வாரத்தில் அன்னாரின் மாற்றத்தினல் ஒன்றும் நடைபெறவில்லை. அப்பதவியை ஏற்றுக்கொண்ட திரு. லயனல் பர்னூந்து உடனடியாக இக் குடும்பங்களை நேர்முகமாகக் கண்டு, அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு 1978—8—4ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் அரசாங்கம் காடுவெட்ட, கட்டை பிடுங்க கிணறுவெட்ட குடும்பத்திற்கு ரூபா 8650/- கொடுப்பதாக உறுதியளித்தார். இவை இதுவரை ஏன் கொடுபடவில்லை? காரணம், ஏதோ காரணத்தினல் இத்தொகுதி யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மூல்லைத்தீவு மாவட்டத்திற்கு மாற்றமடைந்தது அன்று முதல் சிறியதாய் மனப்பான்மை.

இப்பொழுது முல்லைத்தீவு அரசாங்க அதிபராக பதவியேற்றுள்ள முன்பு நீதிபதியாயிருந்த திரு. கே. ஞானச்சந்திரன் அவர்களாவதுநேரில் வந்து எங்களுடைய நிலைமையை கண்டறிந்து இலங்கை வாழ் ஏனைய குடியேற்ற வாசிகளுக்கு செய்யும் உதவியைப் போல் எமக்கும் செய்ய முன்வருவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

றெட்பானு நிர்வாகம் மக்கள் படும் கஷ்டங்களைப் பார்த்து சகிக்க முடியாத சுவீடன் சமூக சேவையாளர் திரு. எண்டரசன் இத்திட்டத்தில் படித்த ஒருவரை றெட்பானு உதவியை நாடி தொடர்பு கொள்ளும்படி தெரிவித்தார். இதையடுத்து இலங்கை நோர்வே றெட்பானு தூதராலய ஜோன் வவஸ்ட்பாக் என்பவருடன் தொடர்பு கொண்டோம். அவர் நேர்முகமாக உதவியளிக்கமுடியாமையினல் அரசாங்க அனுமதியை நாடினுர், திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரத்துடன் மேயில் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் அனுமதியுடன் சிறு கைத்தொழில் அமைச்சு றெட்பானு என்னும் ஸ்தாபனத்தை எங்களின் முன்னேற்ற வேலைகளுக்கென ஒதுக்கப்பட்ட 13 ஏக்கர் காணியில் குடிபுகுத்தியது.

நோர்வே றெட்பானு ஸ்தாபனம் இந்த 200 குடும்ப முன்னேற்றத்திற்கென 4½கோடி ரூபாய் செலவு செய்திருப்பதாக நிர்வாகம் கூறுகின்றது.

குடிக்க ஒருசொட்டுத் தண்ணீரும் இல்லை. காணிகள் காடாக இருக்கின்றன. பக்கத்து இடங்களுக்குப் போய் கூலி வேலை செய்தால் தான் வயிறுபசி தீரும். அரசாங்கத்திடம் போனல் றெட்பானு உதவியளிக்கின்றது என்றும் மறுக்கிறார்கள். 1981ம் ஆண்டு கார்த்திகை மாதம் நடந்த வெள்ளத்தால் எல்லா விவசாயமும் அழிந்து போய் விட்டது. அரசாங்கம் உதவி செல்வதற்கு றெட்பானு நிர்வாகம் இடம்கொடுக்கவில்லை. றெட்பானு என்ன செய்தது? காக்காய் பிடித்தவர்கட்கு சில பண உதவி. சிலருக்கு பத்தில் ஒரு பங்கு. சிலருக்கு ஒன்றுமில்லை. காரணம் அவர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடவில்லை.

இந்த 200 குடும்பங்களையும் அரசாங்கப்பொறுப்பில் விட்டு விடுங்கள். உங்களின் உதவியும் வேண்டாம், உபத்திரவமும் வேண்டாம். எங்களுடைய திட்டத்தை விட்டுப் போனல் போதும் என்றுகேட்டுக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

—பாதிக்கப்பட்டமக்கள்.

# ஈரான் தாக்குதலைசமாளிக்க முடியாமல் ஈராக் படைகள் பின்வாங்குகின்றன

## 300ஈராக்கிய அதிகாரிகளும்பிடிபட்டுள்ளனர்

லண்டன், ஏப். 1

**வளைகுடா யுத்தத்தில், ஈரான் தாக்குதலை சமாளிக்க முடியாமல் ஈராக் படைகள் பின்வாங்கி வருவதாகக் கூறப்படுகிறது. சுமார் 300 ஈராக் அதிகாரிகள், ஈரான் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

கடந்த 22ம் தேதி 3 பிரிவு ஈராக் இராணுவம், பின்வாங்கியிருப்பதாகவும், ஈரானியர் 800 சதுரமைல் பிரதேசத்தை மீண்டும் கைப்பற்றியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஹெலிக்கோப்டரில்யுத்தப்பகுதிக்குச்சென்றவெளிநாட்டுநிருபர்கள், எரிந்தநிலையில்டாங்கிகளையும், கவச வாகனங்களையும் கண்டதாகத்தெரிவித்துள்ளனர்.

கடந்த 10 நாட்களாக இருதரப்பினருக்குமிடையில் பெரும் சண்டை நடைபெற்று வருகிறது. ஈராக் படையினர் அவசரமவசரமாக பின்வாங்கி வருவதாக வெளிநாட்டுநிருபர்கள் தெரிவிக்கின்றனர்.

7 ஈராக் டாங்கிகள் சேற்றில் புதைந்துள்ளதாகவும் தெரிவித்தனர். பின்வாங்கிச் செல்லும்போதே இந்த டாங்கிகள் புதைந்ததாக ஈரானியர் தெரிவித்துள்ளனர்.

ஈராக்—ஈரான் யுத்தத்தில், தொடர்ந்து ஈராக்கிற்குதமது ஆதரவு உண்டென்று ஜோர்டான் மன்னர் ஹூசெய்ன் அறிவித்துள்ளார். ஈராக் அதிபர் சதாம் ஹூசெய்னுடன் அவர் தொடர்பு கொண்டு இந்த உறுதியை அளித்துள்ளார்.

சவுதி அரேபியா, குவைத் ஜனாதிபதிகள், தொலைபேசி மூலம் ஈராக் அதிபருடன் தொடர்பு கொண்டனர்.

ஈராக் படைகள் கட்டுப்பாட்டுடன் வைக்கப்பட்டிருப்பதாக சவூதிஅரேபிய மன்னர் காலித்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இந்தியாவுக்கு பிரிட்டன் உதவும்

புதுவில்லி, ஏப். 1

இந்தியாவுக்கு அனல்சக்தி நிலையமொன்றை அமைக்க பிரிட்டன் 6 கோடி 80 லட்சம் ஸ்ரேர்லிங்பவுணை வழங்கியுள்ளது. (க)

## வேலைநிறுத்தத்தில் சுமுகமான முடிவு

சென்னை, ஏப். 1

பெரியார் மாவட்டத்தில் துணிகள் பதனிடும் ஆலையில் கடந்ந 108 நாட்களாக நடந்து வந்த வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது.

சீருடை, அலவுன்ஸ் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து 1981 டிசம்பர் 10ம் திகதி ஊழியர் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

சென்னையில், கூட்டுக்கமிஷன் நடத்திய பேச்சுவார்த்தையில் சமரச முடிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

எதிர்வரும் சனிக்கிழமை தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புவார்கள் என்று, திராவிட முன்னேற்றக்கழக தொழிற் சங்க தலைவர் திரு. துரைசாமி, கோயம்புத்தூரில் தெரிவித்தார். (க)

## உகண்டாவிலிருந்து

# செஞ்சிலுவைச் சங்கக் குழு வெளியேறியது

லண்டன், ஏப். 1

உகண்டாவில் தங்கியிருந்த 8 பேர் கொண்ட செஞ்சிலுவை குழு நேற்று அரசின் உத்தரவின் பேரில் அங்கிருந்து வெளியேறியுள்ளது. இதனால் அங்குள்ள 1000 கைதிகளுக்கு என்ன நடக்குமோ என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இடிஅமின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து 4000 பேர் சிறை வைக்கப்பட்டனர். செஞ்சிலுவைச்சங்க குழுவினர் அங்கு தங்கியிருந்து கைதிகளுக்கு உதவிசெய்து வந்தனர்.

உகண்டாவில் தங்கியிருப்பதற்கு செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மட்டுமே அனுமதிவழங்கப்பட்டிருந்தது. கடந்தவாரம் அரசு இக்குழுவை வெளியேறுமாறு உத்தரவிட்டிருந்தது. (க)

## வாழ்க்கைத்தரம் வீழ்ச்சி

லண்டன், ஏப். 1

1977ம் ஆண்டுக்குபின், கடந்த ஆண்டு பிரிட்டிஷ் மக்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைந்துள்ளது. 17சத வீதமாக இருந்த வாழ்க்கைத் தரம் 2சத வீதம் குறைந்துள்ளது. [க]

## திடீர் சுகவீனமுற்ற

# சோவியத் ஜனாதிபதி ஆஸ்பத்திரியில் அனுமதி

மொஸ்கோ, ஏப். 1

சோவியத் ஜனாதிபதி பிரஸ்னேவ் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருவதாக சோவியத்திலுள்ள நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சோவியத் தலைவர்கள் சிகிச்சைபெறும்வைத்தியசாலையில் 75 வயதான ஜனாதிபதி பிரஸ்னேவ் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாகாணம் ஒன்றுக்குச் சுற்றுப் பிரயாணம்செய்துகொண்டிருந்தபோது கடந்தவெள்ளிக்கிழமை அவர் திடீர் சுகவீனமுற்றதாகக் கூறப்படுகிறது. என்னசுகவீனமென்று அறிவிக்கப்படவில்லை.

தேகநிலைமை பற்றி மெய்க்காப்பாளர் உத்தியோகபூர்வமாகஅறிவிக்கவில்லை. சுகவீனம் பற்றி அறிவிக்க சோவியத் மறுத்துவிட்டது. (க)

## 500 கலப்பு திருமணங்கள்

சென்னை ஏப். 1

திருவாரூரில் 107 தம்பதிகளுக்கு அரசு செலவில் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

இவ்விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் வீரப்பன் இதுவரை 500 திருமணங்கள் செய்து வைக்கப்பட்டதாகவும் இதில் 354 ஆதி திராவிடர்களது திருமணமென்றும் 500 திருமணங்களும் கலப்புத் திருமணமென்றும் தெரிவித்தார். (க)

## நாடு முழுவதையும்

# "வெளிநாடுகளுக்கு அடகுவைத்தாகிவிட்டது"

### விஜயவீர கருத்து

[அக்கரைபற்று]

நாடுமுழுவதும் வெளிநாட்டு சக்திகளுக்கு இந்த அரசு அடகுவைத்து விட்டது. எதிர்கால சந்ததியினருக்கு இது பெரும் பிரச்னையாகி விட்டது.

அம்பாறையில் நடந்த மக்கள் விடுதலை முன்னனி கூட்டத்தில் முன்னனி தலைவர் திரு. ரோகன விஜயவீரா மேற்கண்டவாறு கூறினர்.

அம்பாறை மாவட்ட மக்கள் விடுதலை முன்னனி தலைவர் திரு எஸ். விஜயசிறி தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. ரோகன விஜவீரா மேலும் கூறியதாவது:-

கோடிக்கணக்கான பணத்தை வெளிநாடுகளிலிருந்து அரசு கடனுகை பெற்றுள்ளது. இக் கடன்களை யார் வழங்கப்போகிறுர்கள்? எதிர்கால சந்ததியினரின் தலையில் தான் இக் கடன்கள் சுமத்தப்பட்டுள்ளது.

எமது கட்சியை ஆட்சியில் அமர்த்த மக்கள் ஒன்று திரண்டு வாக்களிக்கும் நாள் வெகுதூரத்திலில்லை.

அரசு பங்கீட்டு அரிசிப் புத்தகங்களை பறித்துவிட்டது. மிச்சமாகவுள்ள பங்கீட்டுப் பொருட்களையும் அரசு பறித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## புதியகோள் கண்டுபிடிப்பு

கான்பரா, ஏப். 1

பூமிக்கு வெகுதொலைவிலுள்ள கோள் ஒன்றை அவுஸ்திரேலிய விண்வெளிஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

# தீவிர இஸ்ரேலியர் இராணுவத்துடன் மோதல்!

லண்டன், ஏப். 1

சைனியா பிரதேசத்தில் இஸ்ரேலியர் குடியேறுவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இப்பாலைவனப் பிரதேசம், எகிப்திடம் கையளிக்கப்படவிருக்கிறது.

இப்பிரதேசத்திலிருந்து வெளியேறுமல், நூற்றுக்கணக்கான தீவிர இஸ்ரேலியர் இராணுவத்தினருடன் மோதிக் கொண்டனர்.

தீவிரவாத இஸ்ரேலியருக்கு மின்சாரம், நீர், உணவு வழங்கப்படமாட்டாதென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

சைனியாபிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு, வெளியேற 2 வாரகால அவகாசம்வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் உடமைகளுக்கு எவ்வளவு நஷ்டஈடு வழங்குவதெனமுடிவுசெய்யவே இந்த அவகாசம் வழங்கப்பட்டது. (க)


# வைத்திலிங்கம்ஸ்

★ உறுதியானதும்

★ நீடித்து உழைப்பதும்

★ தன்னிகரற்றதுமான

**'றிவர்' பிரான்ட்**

**கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்**

பிரதான விநியோகஸ்தர்களும்,

இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

**என். வைத்திலிங்கம்**

**நிறுவனத்தார்**

450, பழைய சோனக தெரு,

கொழும்பு - 12

தொலைபேசி : 33143-4

கிளை :

138, கே. கே. எஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 530


## மரண சகாய நிதிவழங்கப்படும்

(கொழும்பு)

1980ம் ஆண்டு நடந்த வேலை நிறுத்தத்தில், பதவியிழந்தவர்களின் குடும்பங்களுக்கு மரண சகாய நிதிவழங்க அமைச்சரவை முடிவுசெய்துள்ளது. 5வருட சேவைக்குப்பின் ஓய்வூதியம்பெறும் தகுதிவாய்ந்தவர்கள் மரணமடைந்திருந்தால், அவரின் குடும்பத்திற்கு இந்நிதிவழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா, அமைச்சரவையில் சமர்ப்பித்த மேற்கண்ட ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. (க)

## அரச எழுதுவினைஞர் சங்கம்:

# பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற பொது எழுதுவினைஞர் சேவை அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் தமிழ்மொழிமூலம் தோற்றிய பரீட்சார்த்திகளின்வினுத்தாளில் குளறுபடி காணப்பட்டிருந்தது தெரிந்ததே.

இக்குளறுபடி குறித்து நடவடிக்கைகளை எடுத்து மேற்படி பரீட்சைக்கு தோற்றிய தமிழ் பரீட்சார்த்திகளுக்கு நிவாரணம் வழங்கும்படி அரசாங்க எழுதுவினைஞர்சங்கம்பரீட்சை ஆணையாளரைக்கேட்டுள்ளது.

மேற்படிசங்கம் இது குறித்து பரீட்சை ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதத்தல் கொடுக்கப்பட்ட இரண்டு மணித்தியாலத்தினுள் ஏழு கேள்விகளுக்கும் விடையளிப்பது அசாத்தியமென்றும், எல்லா வினுக்களுக்கும் விடைதரும்படி தமிழ்மொழிமூலம் தோற்றிய பரீட்சார்த்திகளை மட்டும் கேட்டிருந்தது அநீதியானதென்றும், பாடத்திட்டத்துக்கு அமைவில்லாமல் வினுக்கள் தயாரித்தமையும் பரீட்சார்த்திகளுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியென்றும் சுட்டிக்காட்டியிருப்பதுடன், தமிழ்மொழி மூலம் தோற்றியோரின் வினுத்தாள்களை மதிப்பிடும்போது பாதிப்படையாவண்ணம் புள்ளிகளை வழங்குமாறும் கேட்டுள்ளது. (கி)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இளைப்பாறிய அதிபர் திரு. இ. குமாரசாமிக்கு சமாதான நீதவான் பட்டம் வழங்கப்பட்டதை முன்னிட்டு நாளைசனிக்கிழமை மாலை கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய திறந்தவெளியரங்கில் பாராட்டு விழாவொன்று நடைபெறவிருக்கின்றது.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய ஆசிரியர் திரு. சீ. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இப்பாராட்டு விழாவில் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. ஆலாலசுந்தரம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. க. வணசிங்கா, அகில இலங்கை காந்தீய சேவா சங்கத் தலைவர் திரு. தி. சண்முகராசா உட்படப் பல பிரமுகர்கள் பாராட்டுரை வழங்குவார்கள். [கி]

# "கொள்கையை விட்டுக் கொடுத்து ஒப்பந்தம் செய்யவில்லை தமிழ் மக்களின் எதிர்கால நன்மை குறித்தே பேச்சுவார்த்தை"

## செல்வா நினைவுக் கூட்டத்தில் அமிர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

**அரசாங்கத்துடன் நாம் நடத்திவரும் பேச்சுவார்த்தை 'தமிழ் ஈழம்' பற்றிய எமது கோரிக்கை தொடர்பானதல்ல. எமது மக்களின் எதிர் காலத்துக்கு அவசியமான மூன்று முக்கிய அம்சங்களின் மீதே இப்பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. எமது கெ ள்கையை விட்டுக்கொடுக்கும் வகையில் ஒப்பந்தம் செய்துள்ளோம் என்று கூறப்படுவது தவருகும்."**

**இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவரும், தமிழர்விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர்.**

ஆறு மாதத்துக்குத் தமிழீழம் பற்றிப் பேசமாட்டோம் என்று அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக லண்டனிலிருந்து திரு. வைகுந்தவாசன் வெளியிட்டதான பிரசுரத்தை இங்குள்ள பத்திரிகைகள் (ஈழநாடு அல்ல) பிரசுரித்திருந்தது பற்றி திரு. அமிர்தலிங்கம் அமரர்கள் தந்தை செல்வநாயகம், கதிரவேலுப்பிள்ளை நினைவுதினப் பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

தந்தை செல்வநாயகம் நினைவாலயத்துக்கு முன்பாக அறங்காவல்குழுத்தலைவர் திரு. கு. நேசையா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

அவர் மேலும்பேசுகையில், "நான் கடந்த மாதம் 21ம் திகதி திரு. வைகுந்தவாசனையும், மற்றவர்களையும் லண்டனில் சந்தித்து அரசாங்கத்துடன் நாங்கள் நடாத்திய பேச்சுவார்த்தையின் பிரதியைக் காண்பித்தேன். அதில் எமது இனத்தின் முக்கியமான மூன்று விஷயங்களேஜனதிபதியின் கையொப்பத்துடன் இருந்தன.

நாட்டில் வன்முறையைக் கட்டுப்படுத்தி அமைதியான நிலைக்குக் கொண்டுவருவது.

நாட்டில் வன்முறைகள். பலாத்காரம் போன்றவை மீண்டும் தலைதூக்காமல் தடுப்பதற்குச் சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி நடவடிக்கை எடுத்தல்.

"மாவட்ட அபிவிருத்திச் சபைக்குப் பூரணபலமுள்ள அதிகாரம் வழங்குதல். இவை தான் இந்த மூன்று விஷயங்களாகும்.

எமது மாவட்ட நிலம் பறிபோகாமலிருப்பதுடன் வருங்காலச் சந்ததியினரையும் காப்பாற்றிக் கொள்ளவே இந்த உடன்பாட்டைச் செய்து கொண்டோம். எமது பொறுப்பை உணர்ந்துதான் நடவடிக்கை எடுத்துவருகிறோம்" என்றும் திரு. அமிர்தலிங்கம் சொன்னர்.

தந்தை செல்வநாயகம் அவசரப்பட்டு எந்தக்காரியத்தையும் செய்ததுகிடையாது. எந்நேரம் என்னநடவடிக்கை எடுக்கவேண்டுமென உணர்ந்து நடந்துகொண்டார். 35ஆண்டுகளாக அவர் காட்டியபாதையிலேயே சென்று கொண்டிருக்கிறோம்.

"விடுதலைபெற்ற இனமாக வாழ எமது இலட்சியத்தை வென்றெடுக்க ஒற்றுமை அத்தியாவசியம். இந்த மந்திரத்தையே தந்தை செல்வாவும் உச்சரித்துவந்தார்.

### அவர்காட்டிய வழியில்

தார்மீகவழியில் எமக்கெல்லாம் வழிகாட்டிச் சென்ற விடிவெள்ளியாகத் திகழ்ந்த தந்தை செல்வநாயகம், அறவழியிலும் அஹிம்சைவழியிலும் போராட்டங்களை நடாத்திஞர். அவர்காட்டியபாதை வழியே சென்றுகொண்டிருந்த நாங்கள் கல்லெறிக்கும் பொல்லடிக்கும் ஆளாகி இரத்தம் சிந்திஞேம். சாணியால்கூட எங்கள் மேல் வீசினர்கள்.

### தீவிரவாதியல்ல யதார்த்தவாதி

தந்தை செல்வா. பண்டா—செல்வா ஒப்பந்தத்தை அமுல்படுத்த ஒரு யதார்த்தவாதியாகத் திகழ்ந்தார். தான் ஒரு தீவிரவாதி என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் காட்டியதாக இல்லை. மற்றவர் நெருக்கடிக்காக எதையும் அவர் மேற்கொள்ளவில்லை. அவருடன் 33 வருஷங்கள் வாழ்ந்த எனக்குத்தான் தெரியும். தந்தையைப் பற்றி சிந்திச்காதவர்கள் கூட இன்று சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்.

### அமரர் கதிரவேலுப்பிள்ளை

தந்தையின் கொள்கை லட்சியங்களின் வழிகாட்டியாக அமரர் கதிரவேலுப்பிள்ளையும் திகழ்ந்தார். இந்த இரு பெருந்தலைவர்கள் கொண்ட கொள்கையையும் சென்ற பாதையையும் மீண்டும் நாம் சிந்தித்து செயல்படுவோம்.

எம்மீது சந்தேகம் இருக்குமாஞல் இப்புனிதமண்ணில் அச்சந்தேகங்களை நீக்கி எமது இனத்தின் விடுதலைக்கு வழி காண்போம்.

நாங்கள் பிளவுபட்டு நின்று எவ்வளவோ இழந்துவிட்டோம். எம்மிடையே ஏற்பட்டபிளவுகளைக் கண்டே ஆட்சியாளர்கள் கஷ்டத்துக்கு மேல் கஷ்டங்களைத் தந்தார்கள். இக்கஷ்டதுன்பங்களை அனுபவித்துவிட்டோம்.

### ஜீ. ஜீ. மதித்த தாரகமந்திரம்

எமது இனத்தைச் சிதைப்பதற்கு தீயசக்திகள் முனைகின்றன. எம்மை சிதைப்பதற்கு இடம்கொடாமல் ஒற்றுமையை ஒரே பலமாகக் கொண்டு 20—25 வருடங்களாக அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் மதித்து வந்த 'ஒன்று பட்டால் உண்டுவாழ்வு." என்னுப தாரகமந்திரத்தை நாங்களும் மதித்து நடக்கவேண்டும்.

எமக்குள்ளே உள்ள கருத்துவேற்றுமைகளை பேசித்தீர்த்துக் கொள்ளவேண்டும்.

ஆண்டான் அடிமையற்ற சமதர்ம பாதையில் அடியெடுத்துச் செல்வோம். எம்மிமிடையே உள்ள சாதி—சமய பேதங்களை அறவே நீக்கி சுதந்திரபுருஷர்களாக வாழக்கூடிய சமுதாயமாக எம்மை ஆக்கிக் கொள்வோம். அப்பொழுது தான் புத்துணர்ச்சி புத்துயிர் பெற்ற ஒரு சமுதாயமாக விடுதலைபெற்றுத் திருவோம்.

தந்தைசெல்வநாயகம் தான் பாதுகாப்பாக இருந்து கொண்டு மக்களைப்போராட வைத்தவரல்லர்; எந்தப் போராட்டத்துக்கும் முன்மாதிரியாக முன்னின்று இயங்கிஞர்.

### வாய்ப்பேச்சில் பயனில்லை

எமது இனத்தின் நிலத்தைப் பாதுகாக்கவும்— உயிர் உடமைகளைப் பாதுகாக்கவுமே பேச்சுவார்த்தை நடாத்துகிறேமே தவிர வேறெதுவும் பேசவில்லை.

"தமிழீழம் பற்றி அவர்களோடு பேசித் தீர்ப்பதல்ல எமது நோக்கம். நாம் தந்தை செல்வா காட்டிய அகிம்சை வழியில் போராடியே பெற வேண்டியுள்ளோம். இதற்கு முன்பு நம்மை நாமே மன உறுதியுள்ளவராகவும் பலமுள்ளவராகவும் ஆக்க வேண்டும். வாய்ப் பேச்சில் எதனையும் பெறமுடியாது.

நாங்கள் என்ன பொறுப்பை பநிர்வகித்தோம் என்பதற்குவருங் காலம் பதில் சொல்லும்எமது பொறுப்புக்களை உணர்ந்து தான் நடவடிக்கைகள்எடுத்து வருகிறேம்" என்ஞர். (மா)

---

# "சுதந்திர தனிநாடு தமிழ்க்காங்கிரஸ் கொள்கை"

## மாநாட்டைக் கூட்டுமாறு கொழும்புக் கிளை தீர்மானம்

(கொழும்பு)

சுதந்திர தனிநாடே தமிழ் காங்கிரஸின் கொள்கையாக இருக்கவேண்டும் என தமிழ் காங்கிரஸ் கொழும்பு கிளை தீர்மானித்துள்ளது.

தமிழ்க் காங்கிரஸின் கொழும்புகிளையின் வருடாந்த கூட்டம் கிளைத்தலைவர் திரு. சு. சரவணமுத்து தலைமையில் ஆரம்பமானது.

கூட்ட ஆரம்பத்தில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

198' இனக்கலவரங்களின் போது உயிர்நீத்த தமிழர்களுக்கும், படைகளின் தாக்குதலிஞல் உயிர் நீத்த தமிழ் இளைஞரின் மறைவுக்கு கொழும்பு கிளை உறுப்பினர் திரு. நாராயணன் மறைவுக்கும் 3 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சட்டத்தரணி திரு. கே. மோதிலால்நேரு சமர்ப்பித்த கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேறியது. இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் இனத்தின் பிரச்னைக்குத் தீர்வுகாண இந் நாட்டில் பதவிக்கு வந்த அரசாங்கங்கள்தவறியமையாலும் தொடர்ந்தும் அப்பிரச்னைகளுக்கு தீர்வுகாண எவ்வித விருப்பத்தையும் காட்டமுன்வராமையாலும் தமிழ் பேசும் இனத்தை இன, மத, மொழி பொருளாதார ரீதியாக இரண்டாந்தர பிரஜைகளாக நடத்துவதாலும், தமிழ் பேசும் இனத்தை அடக்குமுறை மூலம், அழித்தொழிப்பதற்கு முற்படுவதாலும் தமிழ் பேசும் இனம் சுயமரியாதையுடனும், சகல உரிமைகளுடனும் வாழ்வதற்கு 19'8ம் ஆண்டு ஜூன் 5ம் தேதி பாராளுமன்றத்தில் எமது தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் காட்டிய வழியாகிய சுதந்திரத்தை தான் ஒரேமார்க்கமாக இருப்பதால் இன்று கூடிய கொழும்பு கிளை சுதந்திர தனிநாடுதான்கட்சிக் கொள்கையாக இருக்க வேண்டுமென்றும் இந் நோக்கினை நடைமுறைப் படுத்துவதற்கு கட்சி மகாநாட்டையோ, விசேட மகாசபையையோ உடனடியாக கூட்டுமாறு கட்சிப் பொதுச்செயலாளரை கோருகிறது.

திரு. மோதிலால் நேரு பேசுகையில் கூறியதாவது:- இன்று தமிழ்மகனுக்கு ஒரு சட்டம், ஏனையோருக்கு வெறொரு சட்டம். என்ற நிலையில் அரசு இயங்கிவருகிறது. சரியோ, பிழையோ ஒருசில இளைஞர்கள் தனிநாட்டிற்காக தம்

(5ம் பக்கம் பார்க்க)

இனும்!
இறக்குமதி செய்யப்பட்ட அன்ரெனு மொடல் 503 S
அத்துடன் தொலைக்காட்சி மின்கம்பி (20 யார்)
இச்சலுகை சில தினங்களுக்கு மட்டும்.

அப்பழுக்கற்ற துலக்கமான படங்களுக்கு
**கோல்ட் ஸ்டார்**
வழங்கும்
**பொன்னன சந்தர்ப்பம்**
கறுப்பு - வெள்ளைத் தொலைக்காட்சிப் பெட்டிகள்
35 செ.மீ. (14") 43 செ. மீ. (17")



ஏக முகவர்கள்:
**பேனேஷியா லிமிட்டெட்.**
விற்பனை நிலையங்கள்
கொழும்பு: 172, கேசர் வீதி, கொழும்பு 11 தொலைபேசி: 26598, 22376
திரிகோணமலை: 57, தபால் நிலைய வீதி, திரிகோண மலை
யாழ்ப்பாணம்: 95, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பா ணம்
மற்றும் நாடெங்கிலுமுள்ள பிரபல விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்
14" - ரூ. 2850/- 17" ரூ. 3500/-
ஒரு வருட உத்தரவாதம்
விற்பனைக்குப் பின் பராமரிப்புச் சேவை.

**தங்க நகைகளுக்கும்
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி**

**த பிஞன்ஸ் கம்பனி**
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
**பணவசதி**
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

**த பிஞன்ஸ் கம்பனி லிமிட்.**
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

# “வகுப்பறைகளில் மட்டுமல்ல வெளி உலகிலும் ஆசிரியர்கள் முன்மாதிரி காட்டவேண்டும்”

## பல்கலைக்கழக விரிவுரையாளர் கருத்து

(அரியாலை)

மாணவர்களை சமூகத்தில் நல்ல பிரஜைகளாக வாழச் செய்யவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுடையது என்பதை பாடசாலைகளில் கல்விப் போதனை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் மறந்து விடக் கூடாது.''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வேலாயுதம், யாழ். பரியோவான் கல்லூரி ஆசிரியர் மன்றத்தில் ''மாறி வரும் ஆசிரியர்களின் கடமைகள்'' என்ற தலைப்பில் கலந்துரையாடலில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் கழகத் தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலாநிதி வேலாயுதம் தொடர்ந்து பேசுகையில்: ஆசிரியர்கள் உலகில் ஏற்படும் மாற்றங்களுக்கமைய கல்விப்போதனையை மேற்க் கொள்ளவேண்டும். ஆனல் இலங்கையில் காலத்துக்குக் காலம் ஏற்படும் அரசியல் மாற்றத்திற்கேற்ப செய்யப்படும் கல்வி மாற்றங்களுக்கமையவே கல்வி போதனையை மேற்க் கொள்ளவேண்டியுள்ளது. இலங்கையில் மேற்க் கொள்ளப்படும் கல்வி முறைகள் யாவும் குளிரூட்டப் பட்ட அறைகளிலிருந்தே தீர்மானிக்கம்படுகின்றனவே தவிர மாணவர்களின் திறனுக்கமைய கல்வித் திட்டங்கள் தயார் செய்யப்படாத அவலநிலை நமது நாட்டில் இருப்பது வேதனைக்குரியதாகும். ஆசிரியர்கள் வகுப்பறைகளில் மட்டுமல்ல வெளியுலகிலும் மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கவேண்டும். மாணவர்களில் பின்தங்கிய நிலை மாணவர்கள் என ஒரு பகுதியினர் இல்லை. அவர்களுக்கு சமய வாய்ப்பான கல்விப் போதனை அளிக்கப்பட்டால் அவர்களும் முதன்மைமாணவர்கள் ஆவர். மாணவர்களின் அறிவுத்திறனை எப்படி வளர்ப்பது என்பதற்கு ஆதாரமாகவே பாடத்திட்டங்களும் பாடக்குறிப்புகளும் ஆசிரியர்களுக்குதவுகின்றன. இதைவிட அவை ஆசிரியர்களைப் பரீட்சிப்பதற்கல்ல என்பதை ஆசிரியர்கள் மனதில் கொள்ளவேண்டும். பாடத் திட்டங்கள் ஆசிரியர்களை தயாராக்கும் திட்டங்களாகவே அமையவேண்டுமே தவிர ஆசிரியர்களைப் பரீட்சிக்கும் திட்டமாக அமையக்கூடாது.

ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கல்வி அறிவை ஊட்டுபவர்களாக மட்டுமல்ல மாணவர்களை சிந்தித்துச் செயற்படத் தூண்டுபவர்களாகவும் விளங்கவேண்டும். அவர்களிடம் மறைந்திருந்தும் புத்தூக்கங்களை கட்டி வளர்த்து விடும் பணியையும் ஆசிரியர்களே மேற்க்கொள்ளவேண்டும். கல்வித்திட்டங்களை உருவாக்குவதில் கல்வி அதிகாரிகள் மட்டுமல்ல ஆசிரியர்களும், கல்விமான்களும் இணைந்து செயல்படவேண்டும். சமுதாய நோக்கு தேசிய நோக்கு என்பவற்றை அடிப்படையாக வைத்தே கல்வித்திட்டங்கள் அமைக்கப்படவேண்டும். இத்திட்டங்களே மாணவர்களுக்குப் பயனுள்ளனவாக அமையும் என்று குறிப்பிட்டார்.

### வரணி திருட்டு வழக்கு:

# ‘கள்ளன் என்றதும் எதிரி ஓடிவிட்டார்”

(சாவகச்சேரி)

''சம்பவதினம் இரவு 11 மணிசத்தம்கேட்டது. எழும்பி எரிந்துகொண்டிருக்கும் லாம்பு வெளிச்சத்தில் பார்த்தேன் எதிரி பெட்டிக்கு முன்னல் குந்தியிருந்தார். நான் கள்ளன் என்று சத்தமிடவே அவர் ஓடி விட்டார்.''

வரணி சங்கிலி திருட்டுவழக்கில் சாட்சியமளிக்கும் போது சின்னத்தம்பி சிவம் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதி மன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் வரணியைச் சேர்ந்த இராசகுலம் என்பவர் 1977ம் ஆண்டு நவம்பர் 24ம் திகதி அவ்வூரைச்சேர்ந்த சின்னத்தம்பி சிவம் என்பவரது வீட்டில் 3 பவுண் நிறையும் 6000 ரூபாவும் பெறுமதியுள்ள சங்கிலியைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்காரர் சார்பில் சட்டத்தணி ஆர். சுரேந்திரனும் எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். செல்வரத்தினமும் ஆஜராகினர்.

சின்னத்தம்பி சிவம் சாட்சியமளிக்கும் போது தொடர்ந்து கூறியதாவது; எதிரி எனது சகோதரன் முறையானவர். அவர் ஓடும்போது லாம்பு வெளிச்சத்தில் சங்கிலி கையிற் கொண்டுபோனதைக் கண்டேன். கலைத்துச்சென்றேன். அவர் விரைவாக ஓடிவிட்டார். அவருக்கும் எனக்கும் எந்தவித கோபதாபமும் கிடையாது. நான் உடனே பொலிசுக்கு போய் முறையிட்டேன்.

எதிரிதரப்புச் சட்டத்தரணி ஆர். செல்வரத்தினம் சாட்சியைக்குறுக்கு விசாரணை செய்தார்.

சட்டத்தரணி; படுத்திருந்த இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் பெட்டி இருந்தது? — சுமார் 2 யார்தூரத்தில்.

சட்: விளக்கெங்கே எரிந்து கொண்டிருந்தது?— எனக்கு இடது பக்கத்தில்

சட்: என்னமாதிரிவிளக்கு? —அரிக்கன்லாம்பு.

சட்; அரிக்கன் லாம்பில்லாவிட்டால் எதிரியை அடையாளம் காணமுடியாது? — ஆம்.

சட்; குடபிவிளக்கில்லை? — இல்லை இலாம்பு.

சட்: பொலிசிலும் அரிக்கன்லாம்பு என்றுதான் கூறியிருக்கிறீர்?—ஆம்.

சட்: என்ன பெட்டி?— டிறங்குப்பெட்டி.

சட்: சத்தம் கேட்டதென்றீர். என்னசத்தம்?—பெட்டி மூடிய சத்தம்.

சட்: 2 யார் தூரத்தில் தானே படுத்திருந்தீர் பிடித்திருக்கலாமே.—தூக்கமாக இருந்தபடியால் நான் பிடிக்க முடியாமற் போய்விட்டது.

சட்: உமது மனைவியும் இதைக் கண்டவரா? — நான் சொல்லித்தான் அவவுக்குத் தெரியும்.

மனைவி மலர் சாட்சியமளிக்கையில் குழந்தை இருப்பதால் இரவில் குப்பிவிளக்கொன்று பிள்ளைக்கு மா, கரைத்துக் கொடுப்பதற்கு வைத்திருந்ததெனவும், அரிக்கன் லாம்பு அல்ல என்றும் தான் பெட்டிதிறந்தது காணவில்லை எனவும் தனது கணவன் தான் இராசகுலம் சங்கிலி எடுத்துக் கொண்டு ஓடுவதாகக் கூறியதாகவும் சொன்னார்.

நீதிபதி எம்.எச்.காரியப்பர் விசாரணையை மே மாதம் 3ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(க)

# “எமக்காக உயிரைப் பலிகொடுத்தார்”

(கரவெட்டி)

''இந்த வருடத் தபக்காலச் சிந்தனைக்கும் செயலுக்கும் ''நீ எனது சகோதரன்'' என்னும் சொற்கள் சிபார்சு சேய்யப்பட்டுள்ளன. பக்தியருட்சியுடன், செபத்தில் நிலைத்திருக்கும் வேளைகளில், சிலுவையில் தொங்கும் யேசுவின் பால் எமது கண்களைத் திருப்பி நன்றியுணர்வுள்ள அன்புடன் மேற் கூறிய சொற்களைச் சொல்வோமாக,,

இவ்வாறு கொழும்பு துணை மேற்றிராணியார் அதி, வந். எட்மன்ட் பர்ணந்து ஆண்டகை இலங்கை கத்தோலிக்க மக்களுக்கு விடுத்துள்ள தபக் கால நற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பிரஸ்தாப செய்தியில் துணை மேற்றிராணியார் எட்மன்ட் பர்ணந்து ஆண்டகை தெரிவித்துள்ளதாவது; ''யேசுக் கிறிஸ்து நாதர் எமது சகோத

(7ம் பக்கம் பார்க்க)

# ஆனந்தசங்கரி தடையின்றி பேசி முடித்தார்

(யாழ்ப்பாணம்)

பளைப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழாவில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியின் பேச்சு இடையில் நின்றது என்பது தொடர்பாக ‚ஈழநாடு’ 28ம் திகதிய பத்திரிகையில் வெளிவந்த செய்தி குறித்து பளைப்பகுதி உதவி அரசாங்க அதிபர். திரு. சு. முருகவேள் பின்வருமாறு எழுதுகிறார்:

28.3.82 ல் வெளியான செய்தியின்படி பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியின் பேச்சு இடையில் நின்றது என்பது உண்மைக்குப் புறம்பானது. அவர் தன்னுடைய சிறப்புரையை எதுவித தடையுமின்றிப் பேசிமுடித்தார். கூட்ட முடிவில் இருபிரிவினருக்குமிடையில் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டை எம்.பி.யே எங்களுடன் முன்னின்று இரு சாராரையும் ஒரு முகப்படுத்தினர்.

### சுதந்திர...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மையே அர்ப்பணித்து போராடிக் கொண்டிருக்கிறர்கள் தமிழ்பேசுமினம் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள தன் சுயமரியாதை, சுயகௌரவம் ஆகியவற்றுடன் வாழ தனி நாடுதவிரவேறு வழியில்லை.

மூன்றரை மணிநேர விவாதத்தின்பின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

(க)

### திருட்டு வழக்கில்:

# பிரதிப் பொலிஸ்மா அதிபர் குணதிலக்கா குற்றவாளி

## 50 பவுண்கள் அபராதம்

லண்டன், ஏப். 1

‘செல்வ்றிஜட்ஸ்’ வியாபார நிலையத்தில் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரெல் குணதிலக்கா குற்றவாளியென நிரூபிக்கப்பட்டார். இதனையடுத்து இவர்மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை விசாரித்த பெண் நீதிபதியான செல்வி அவுட்றி ஜென்னிங்ஸ் 50 பவுண்களை அபராதமாக விதித்தார். [இலங்கை நாணயப்படி சுமார் 2000 ரூபாவாகும்.]

பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரெல் குணதிலக்கா மீதான திருட்டு வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மூன்று மணித்தியாலங்கள் வரை விசாரிக்கப்பட்டது. திரெல் குணதிலக்காவின் மனைவியான குசுமா குணதிலக்காவும் இவ்வழக்கில் சாட்சியமளித்தார்.

தீர்ப்பினை வழங்கிய நீதிபதி செல்வி ஜென்னிங்ஸ் ‘நீர் ஒரு நோயாளியாக வந்திருப்பதையும், உமது பதவியையிட்டுமே ஓரளவு கருணை காட்டியுள்ளேன். இல்லாவிடில் இதைவிட மேலான தண்டனையையே வழங்கியிருப்பேன்’ எனத் தெரிவித்தார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரெல் குணதிலக்கா ‘செல்வ்றிஜட்ஸ்’ என்ற பிரபல்யமான வியாபார நிலையத்தின் அடித்தளத்திலுள்ள பகுதியிலேயே சிறு கருவிகள் சிலவற்றையும், மற்றும் சில பொருட்களையும், திருடினரென்றும் இவற்றின் பெறுமதி 50—83 பவுண்கள் என்றும் விசாரணையின்போது தெரியவந்தது.

திரெல் குணதிலகா சார்பில் திரு. நிகெல் மில்ம் என்ற சட்டத்தரணியும், ‘செல்வ்றிஜட்ஸ்’ சார்பில் திரு. பீ’டர் ஹொரக்ஸ் என்ற சட்டத்தரணியும் ஆஜராகியிருந்தனர்.

இலங்கை அரசாங்கம் இருதய சிகிச்சையை மேற்கொள்ளச் சென்றிருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரெல் குணதிலக்காவிற்கு 5000 பவுண்களையும், இரு இலவச பயணச்சீட்டுக்களையும் வழங்கியிருந்தமை குடுப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க இலங்கைப் பாதுகாப்பமைச்சு திரெல் குணதிலக்கா விவகாரம் சம்பந்தமாக இங்கிலாந்திலுள்ள இலங்கைத்தூதரகத்துடனும், ‘ஸ்கொட்லன்ட்யார்ட்’ பொலிஸ் நிறுவனத்துடனும் தொடர்பு கொண்டு முழு விபரங்களையும் கோரியுள்ளது.

(கி)

# “சுதந்திர உணர்வு இருந்தாலும் உத்வேகம் போதாது”

## அபிவிருத்திச் சபைத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

''தமிழ் மக்கள் இன்று ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிருகள். தமக்கென்றெரு தாயகம் இல்லை. இதனல் சுதந்திர தாகம் மேலிட்டிருக்கிறது. ஆனல் எந்தவழியில் சுதந்திரத்தைப் பெறுவதென்பது மக்களின் கைகளில்தான் தங்கி இருக்கிறது'' என்று யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தந்தை செல்வா நினைவாலயத்தில் அஞ்சலி செலுத்திப் பேசுகையில் தெரிவித்தார்.

''ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் செய்வதுதான் சரி என்கிறுர்கள். மற்றைய தலைவர்களையும் அவர்கள் மனதில் கொள்ளவேண்டுமென்றும் திரு. நடராசா குறிப்பிட்டார்.

''தமிழ்மக்கள் மத்தியில் சுதந்திர உணர்வை ஊட்டிய முதல்வர் தந்தை செல்வா அவர்கள் என்று சொன்ன திரு. நடராசா, காந்திய அறவழியிலேயே சுதந்திரம் பெற முடியும் என்று எங்களை இட்டுச் சென்றுர் என்றுர்.

''எம்மிடையே சுதந்திர உணர்ச்சி இருந்தாலும் உத்

(7ம் பக்கம் பார்க்க)


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் ‘காளான்’ தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு ''மேற்கு ஜெர்மனி ‘BASF’'' தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்

500 கிராம் ரூபா 12/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்

297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

தொலைபேசி: 32941-5

Metropolitan

வெஸ்லி மணிப்பாய்

தினசரி 2.30 6.15 9.15

ரஜனிகாந்த்—சிமா

காளி

யாழ்.றீகல்

தினசரி 10—30, 2—30, 6—30, 9—30

சில தினங்கள் மட்டும்

தனிமரம்

ஹரன் யாழ்.நகர்

தினசரி 4 காட்சிகள்

ஜெய்சங்கர்—சாவித்திரி

ஜ க் க ம் ம ா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

அஜாசத்தா (தமிழ்)

லிடோ (யாழ்.நகர்)

தினசரி 4 காட்சிகள்

பூந்தளிர்

2-வது ஜனத்திரள் மாதம்

ராணி (யாழ்.நகர்)

தினசரி 10.30, 2.30, 6.15 9.30

கமலஹாசன் - ரதி நடித்த

உல்லாசப் பறவைகள்

(ஈஸ்ட்மன் கலர்)

இன்று மட்டும்

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

பிரதாப் சுரேகா

த க் க ா ர ா

(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)

(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

மனோகரா (யாழ்ப்பாணம்)

10-30, 2-30, 6-30 9-30

2-4-82—5-4-82 வரை மாலினி பொன்சேகா நடித்த

ஆ ர ா த ன (சிங்களம் —கலர்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)

தினசரி 4 காட்சிகள்

ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த

பொல்லாதவன்

(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்ப்பாணம்)

தினசரி 5 காட்சிகள்

CHARLES BRONSON

"THE MECHANIC"

Color—Adults

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

பெண்குலத்தின் பெருமையை விளக்கும் அற்புதமான வண்ணச் சித்திரம்—ஒவ்வொரு பெண்ணுக்கும் ஓர் ஒப்பற்ற படிப்பினையாக விளங்கும் உன்னத காவியம்—திடீர்த் தீர்மானத்தினால் திரைப்பட நட்சத்திரத்திற்கு ஏற்பட்ட விபரீத முடிவைக் காணத் தவறாதீர்—

ஸ்ரீபிரியா—கமல்— ரஜனி— நாகேஷ்—

நடிகர் திலகம் சிவாஜி மற்றும் பல

முன்னணி நட்சத்திரங்கள் நடித்த

★நட்சத்திரம்★


# இன்றைய பலன்

பங்குனி மாதம் 20ம் திகதி
வெள்ளிக்கிழமை
(2—4—82)

மேடம்: தொழில்துறையில் முன்னேற்றம் தென்படும், மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், தொழில்துறையில் புதிய தொடர்புகள் ஏற்படும், சிலருக்கு நன்மையான இடமாற்றம் உண்டு.

இடபம்; மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கம் காட்டுவீர்கள் தாராள குணத்தின் மூலம் தனமும் செல்வாக்கும் புண்ணிய யாத்திரையுமுண்டு.

மிதுனம்: துன்பத்தின் ரேகைகள் படரும், எதிலும் தயக்கம் ஏற்படும், ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும், கடன் தொல்லை அதிகரிக்கலாம், நிதானம் வேண்டும்.

கடகம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள், எதிலும் அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும், உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துக, பிரயாணத்தைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது.

சிங்கம்: புதுவழிகள் மூலம் பணம் கிடைக்கும், குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, வெளியிடத் தொடர்பால் வேண்டியன கிட்டும், இன்று நல்ல நாள்.

கன்னி: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை தேடிக்கொள்வீர்கள், அரச பயத்திற்கும் இடமேற்படும், ஆகையால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும்.

துலாம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும், சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம், நிதானம் நன்று.

விருச்சிகம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம், தெய்வத்தின் அருளும் தாராளமாகக் கிடைக்கும். புத்திர வழியால் புகழும் சேரும், புனிதமான நாள்.

தனுசு: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும், இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக் கொள்ளவும். அரசியல்வாதிகளாயின் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளவும். வரவிலும் தடையுண்டு.

மகரம்: இன்பம் உங்களைத் தாலாட்டும். புதிய உறவு முறைகளினால் மகிழ்ச்சியடைவீர்க்ள், எதிர்பார்த்த கடிதமொன்று கிடைப்பதன் மூலம் இதயம் பூரிப்பால் விம்மும், குடும்பத்தில் கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு.

கும்பம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களைப் புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும், தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும், கால் நடை விருத்திக்கும் இடமேற்படமுடியும்.

மீனம்: உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும், உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள், உவகைசேரும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பிரதமர் விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ஆர். பிரேமதாசா இன்று கண்டி, யட்டிநுவர, செங்கடகல பகுதிகளுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

யட்டிநுவரவில் 149வது மாதிரிக்கிராமத்தை பிரதமர் திறந்துவைப்பார். (க)

## விசேட சேவை அதிகாரி நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த சுல்தான் முகிதீன் முகமட் ஜருபர் யாழ்ப்பாணத் தொகுதிக்கு விசேட சேவை அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச்சங்கமுன்னுள் கிளை முகாமையாளரா

கிய இவர் யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் தனது பாடசாலைக் காலத்தில் விளையாட்டுப் போட்டிகளிலும் உயர்தர மாணவ மன்றத்திலும் கூடிய பங்காற்றியதோடு மாணவர் தலைவர்களுள் ஒருவராகவும் இருந்து வந்துள்ளார்.

இவர் பிரபல சமூக சேவையாளரும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சார்ந்தவருமான ஜனாப் எஸ். எம். சுல்தான் தம்பதியர்களின் புதல்வராவார்.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ்:

# ஏப்பிரல் 30 க்கு முன்னர்

## அங்கத்தவர் கருத்து அறியப்படும்

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் தமிழ் காங்கிரஸ் போட்டியிடுவதுபற்றி ஆலோசிக்கவிருக்கிறது.

தமிழ் காங்கிரஸ் கொழும்பு கிளைக்கூட்டத்தில் தமிழ்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் ஜனாதிபதி தேர்தலில் கட்சி பங்கு பற்றியது பற்றி அங்கத்தவர்கள் ஒவ்வொருவரின் கருத்தையும் அறியதான் ஆவலாக இருப்பதாக தெரிவித்தார்.

அங்கத்தவர்களின் கருத்தை தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளருக்கோ அல்லது கொழும்பு கிளைச்செயலாளருக்கோ எழுத்து மூலம் ஏப்பிரல்30ம்தேதிக்குமுன் அனுப்பி வைக்குமாறும் அவர் கூறினார்.

திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது; இன்னும் சிறிது காலத்தில் பொதுத் தேர்தலும், ஜனாதிபதி தேர்தலும் இடம்பெறவிருக்கிறது. இந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்பேசும் மகன் ஒருவன் போட்டியிடவேண்டாமா? என்பதை தீர்மானிக்க நீங்கள் உங்கள் பங்களிப்பை செய்யவேண்டும், ஜனாதிபதி தேர்தலில் தமிழ்பேசும் மகனொருவன் வெற்றிபெற முடியுமென்று நான் நம்பவில்லை. எனினும் தமிழ்பேசும் மக்கள் இலங்கை ஜனாதிபதியை ஏற்கவில்லை என்பதை உலகிற்கு உணர்த்திடப் போட்டியிட வேண்டும் என்பது என் தனிப்பட்ட கருத்தாகும். (க)

## தவக்கால நற்சிந்தனை



இன்றைய உலகம் பதவி, பணம், பெயர், புகழ், பெருமை என்பவற்றிற்காக ஓடி அலைகிறது. சகோதரர் நண்பர், உறவினர். அயலார் என உரிமை பாராட்ட, உறவு வளர்க்க பலர் இருப்பார்கள். ஆனால் உதவி தேவைப்படும் போது விலகி நிற்கவும், முன்னேறிச் செல்லும்போது கூட இருந்து குழிபறிக்கவும் இவர்கள்தான் முன் நிற்பர். தாயும், பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வெறல்லவா? அன்பனாக ஆறுதல் கூறி, நண்பனாக அன்பு காட்டி, குருவாக ஆசீர் வழங்கி தலைவனாக வழிநடத்திய கிறிஸ்துவின் பெயரும், புகழும் அதிகரிக்கும்போது, கூட இருந்தவர்களே கல்லால் எறிந்து கொன்றுவிட முன்வருகின்றனர். பச்சை மரத்திற்கே இப்படி என்றால் பட்ட மரத்தின் நிலை என்ன ?

அருட்செல்வன் ரூபன்

## நாகேந்திரமட வி. கழகம் முதலிடம்

[யாழ்ப்பாணம்]

விளையாட்டு அமைச்சினால் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடந்த மெய்வல்லுநர் போட்டியில் அராலி நாகேந்திரமடம் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தைப் பெற்றது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. அருணாசலம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றிபெற்றோருக்கு பரிசில்களை வழங்கினார். [கு]

## அமரர் தாமோதரம்பிள்ளை



இந்த ஞாபகங்களின் பயன் தான் என்ன? என அடிக்கடி என்னை நான் வினவியது உண்டு. விடை இல்லை. எனினும் நாங்கள் எழுதுகிறோம். அவ்வாறே நானும் செய்கின்றேன். மறுக்க முடியாதவாறு ஒரு வேண்டுகோளுக்கு ஒரு விடை. திரு. கந்தையா தாமோதரம்பிள்ளையின் நினைவை என் நெஞ்சகத்துக் கொண்டுள்ளேன். அவர் ஒரு நல்ல மனிதன்.

'சபா' என்று தன் நண்பர்கள் மத்தியினும் உறவினர் மத்தியிலும் கடந்த 33 ஆண்டுகள் அதாவது பருத்தித்துறையில் நான் வழக்கறிஞர் தொழிலை ஆரம்பித்த நாள் தொடக்கம் அவரைநான் அறிவேன். அவருடன் சேர்ந்து வழக்குகளில் தோன்றியுள்ளோம். எதிர்த்தரப்புகளிலும் தோன்றியுள்ளோம்.

தற்பொழுது உயர்நீதிமன்ற நீதியரசராக விளங்கும் திரு. டி. விமலரத்ன 1952ல் பருத்தித்துறை நீதிபதியாக இருந்த பொழுது அவருக்கு பெருமதிப்புக் கொடுத்தார். நான் திரு. விமலரத்னவை கொழும்பில் சந்திக்கும் பொழுதெல்லாம் அவர் சபா தாமோதரம்பிள்ளையைப்பற்றி விசாரிக்கத் தவறியதில்லை.

1940ம் ஆண்டு வழக்கறிஞராக தனது தொழிலை ஆரம்பித்தார். அண்மைக் காலத்தில் உடல் நிலை காரணமாக தனது தொழிலைக் கைவிட வேண்டியிருந்தது. பல ஆண்டுகள் மரண விசாரணை அதிகாரியாகவும் அவர் கடமையாற்றினார். மிகப் பணிவான வாழ்க்கையை வாழ்ந்த அவர் தனது மக்களுக்கு அன்புததும்பும் தந்தையாகவும் விளங்கினார்.

'சபா' நீதியும், கௌரவமும் உள்ள ஒரு மனிதனாகவும் மனிதத்தன்மை கொண்ட அன்புடை நண்பனாகவும் நகைச்சுவை கொண்டவராகவும் விளங்கினார். அவர் விலையுயர்ந்த நண்பனாக விளங்கினார். அவரது ஆத்மா பரமாத்மா ஆகுக.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று நடைபெறவிருக்கிறது.

—வீ. செல்லத்தம்பி,
சட்டத்தரணி.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ். திருமுறை மன்றத்தினரிடம் தஞ்சாவூரில் இருந்து தருவிக்கப்பெற்ற புதிய வீணை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: சி. கிருஷ்ணமூர்த்தி, திருமுறை மன்றம், 31/12, சங்கிலியன்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2723

இறக்குமதி செய்யப்பட்ட குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்குண்டு. (வெஸ்ட்டிங் கவுஸ் 12 ச. அடி கொள் அளவு) ஹோட்டல் றிவேக்கா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2721

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பயிற்சி

ஒரு மாத எலக்றிக்கல் வயரிங்—வெல்டிங் டிப்பிளோமா பயிற்சிகள் 06—04—82 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 2725

## ஆங்கிலக் கல்வி

நவீன உலகத்தினுட் பிரவேசிக்க ஒரே ஒரு திறவுகோல் ஆங்கில அறிவேயாகும். இதை எல்லோருக்கும் உகந்த இலகுவானமுறையில் உச்சரிப்புகளுடனும் மொழிபெயர்ப்புகளுனும் கற்பிக்கின்ற ஒரே ஒரு தமிழ் வார இதழ் 'விளக்கமான ஆங்கிலம்' எங்கும் கிடைக்கும். விலை 2/25. ஆங்கிலம் பிரசுரிப்பாளர்கள், த. பெ. 23, கண்டி. 2520

## பயிற்சி

வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வயறிங் (அறிமுறை, செய்முறையுடன்) ஆரம்பம் 03—04—82 P. M. 1—00 மணி J. E. C. 33, பருத்தித்துறை வீதி, றெயில்வே கடவைக்கு அருகில், யாழ்ப்பாணம். 2730

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்பிளோமா பயிற்சி 05—04—82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 2724

## யாருடையது ?

எஸ். வசந்தகுமார் என்ற மாணவன் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியுலுள்ள விவேகானந்த அச்சகத்துக்கு முன்னுல் பெண்மணி ஒருவரின் தேசிய அடையாள அட்டையைக் கண்டெடுத்து எமது காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் எமது காரியாலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம். (ஆர்)

## Week-End English Class at D. R. E. C.

THE CENTRE FOR DEVELOPMENT RESEARCH, EDUCATION AND COMMUNICATION LTD.
Maniam Building, No. 15, Sirambiady Lane, Jaffna. (Near Sridhar Theatre)

### A Six-Month Course in Basic English

With Emphasis on Speech & Structure
**Saturdays and Sundays 10-00 — 12-00 Noon**
Commencing on: **3rd APRIL, 1982.**
Fees: Rs. 30/- per month.
Lecturer: MR. R. KANTHIAH,
Retd. Head of English Dept.,
Palaly Teachers' College.

# மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட்

(அங்கிகரிக்கப்பட்ட கிறெடிற் ஏஜென்சி)

## நிலையான வைப்புத் திட்டங்கள்

| காலம் | மாதாந்த வட்டி கொடுத்தல் | காலமுடிவில் வட்டி கொடுத்தல் |
|---|---|---|
| 7 மாத வைப்பு (வருட வட்டி) | ---- | 19% |
| 9 மாத வைப்பு ( " " ) | ---- | 22% |
| 1 வருட வைப்பு ( " " ) | 24 % | 25% |
| 2 வருட வைப்பு ( " " ) | 24 % | 27% |
| 3 வருட வைப்பு ( " " ) | 24 % | 30% |

★ நிலையான வைப்புக்கணக்கு தொடங்குவதற்கு செலுத்தவேண்டிய குறைந்த தொகை ரூபா 1000/—

★ வட்டி, மாதாமாதம், மூன்று மாதத்திற்கொருமுறை, ஆறு மாதத்திற்கொருமுறை வருடமொருமுறை வைப்புப்பணம் கொடுத்தவர்களின் விருப்பப்படி கொடுக்கப்படும்.

★ (1979—ம் ஆண்டின் 27—ம் இலக்க நிதிக்கம்பனிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 18—ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட 1981—ம் ஆண்டின் 1—ம் இலக்க விதிகளின்படி கீழ்க்காணும் தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன)

★ கூட்டிணைக்கப்பட்ட தேதி: 2—5—1979

### பிரதானமான தொழில் வகைகள்

★ வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன் வழங்கல், வங்கி, மறுதாபனக் கடன் ஒழுங்கு செய்தல், வர்த்தக வாகனங்கள், உழவு யந்திரங்கட்கு (ட்ராக்டர்) வாடகைக் கொள்வனவுக்கு கடன் கொடுத்தல், இடைக்கால கடன் வழங்கல், காப்புறுதி செய்யப்பட்ட பண்டசாலை வசதிகள்.

| | 31—3—80ல் முடிந்த ஏழு மாதத்திற்கு | 31—3—81ல் முடிந்த வருடத்திற்கு |
|---|---|---|
| | ரூ. ,000 | ரூ. ,000 |
| பங்கு மூலதனம் | 69 | 100, |
| நிலையான கடன் முறிகள் | 460, | 585, |
| வைப்புக்கள் | 838, | 3,444, |
| பெற்ற கடன்கள் | இல்லை | இல்லை |
| வரிக்கு முன் லாபம் | 7, | 188, |
| வரிக்குப் பின் லாபம் | 7, | 188, |
| வழங்கப்பட்ட பங்கு லாபங்கள் | இல்லை | 25% |

### இயக்குநர்சபை:

டாக்டர் யோகு பசுபதி, M. B. B. S. (Cey) D. C. H. (Lond), M. R. C. P. (Lond) தலைவர்
A. சோமசுந்தரம்பிள்ளை, B. A, F. C. A. முகாமைத்துவ இயக்குநர்
K. லோகநாதன், B. Sc. நிறைவேற்று இயக்குநர்
K. நடராசா, B. Sc, Bar—at—Law, Attorney—at—Law இயக்குநர்
C. மகேசன், Attorney—at—Law இயக்குநர்
N. சிவசிதம்பரம், Retd S. L. A. S. இயக்குநர்

விபரங்கட்கு தொடர்புகொள்க

**தலைமைக்காரியாலயம்,**
129, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8183

**வழிகாட்டு அலுவலகம்,**
52/1, ராஜசிங்க ரோட்
வெள்ளவத்தை.
83259

## வெற்றுச் சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 6000க்கு மேற்பட்ட சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 25.00 மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சீல்வைத்த கேள்விப் பத்திரங்கள் யாவும் 10—04—82ந் திகதி சனிக்கிழமைக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால்மூலம் "பொது முகாமையாளர், கட்டைவேலி—நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் "வெற்றுச் சாக்குக்கான கேள்வி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**சோ. இராமலிங்கம்,**
பொதுமுகாமையாளர்,
கட்டைவேலி—நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.
கரவெட்டி,
31—03—82. 2726

## வலி-கிழக்கு தென்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 'நீர்வேலி அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு தென் பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 50/—வும், கேள்விப்பத்திரமொன்று ரூபா 1/—ம் செலுத்தி சங்க வேலைநாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 05—04—82ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12—00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பொதுமுகாமையாளர்,**
நீர்வேலி,
1982—03—26. 2728

## எமக்காக...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ரஞக இருந்துதான் தனது உயிரை எமக்காகச் சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுத்து எமக்கு மீட்பளித்தார். ஆகவே நாம் எமது நாளாந்த செயல்களைச் செய்யும்போதும், ஒருவர் ஒருவரைச் சந்திக்கும் போதும் இந்த விசுவாசமுயற்சியைப் புதுப்பிப்போமாக. "இவன் எனது சகோதரன் இவனுக்காக யேசு சிலுவையில பாடுபட்டு உயிர்விட்டார்" எமது அன்புச் செயல்கள் யாவும் எவ்வளவு சிறிதாக இருந்தாலும் எமது விசிவாசத்திற்கு அடுத்த செயல்களுடன் இணைவதாக" (கு)

## தாவடி கிராமோதய சபைத் தலைவர்



(கோண்டாவில்)

தாவடி கிராமோதயசபைத் தலைவராக திரு. இரா. சந்திரசேகரம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

தாவடி சைவ இளைஞர் சங்கத் தலைவரும், கிராம அபிவிருத்திச் சங்க செயலாளரும், தாவடி மத்திய சனசமூக நிலையப் பொருளாளரும், சர்வோதய தாவடிக்கிளையின் உதவிச் செயலாளருமான இவர் தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலயம், தாவடி லலிதா பீடம், தாவடி இந்துத் தமிழ் கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சுன்னுகம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர் சங்கம் ஆகியவற்றின் நிர்வாக சபை உறுப்பினரும் ஆவார்.

## ஒலியரப்பு நிலையம்

(கொழும்பு)

சுயாதீன தொலைக்காட்சி விஸ்தரிப்புக்காக புதிய ஒலிபரப்பு நிலையமொன்றிற்கான அடிக்கல், நேற்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பகுதியில் நாட்டப்பட்டது.

சுமார் 40 லட்ச ரூபா செலவில் நிறுவப்படும் புதிய ஒலிபரப்பு நிலையம் அக்டோபர் மாதம இயங்க ஆரம்பிக்கும்.

## அங்கவீனர்களுக்கு...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அங்கவீனர்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்ட பெரியார்கள் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் யாவரும்ஒன்று சேர்ந்து நடாத்தும் இவ்வைபவம் ஒரு பெரிய விழாவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## சுதந்திர...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வேகம் போதாது; தந்தை செல்வா வழியில் செல்லும் எங்களைத் தாக்குவதே குறிக்கோளாகக் கொண்டுள்ளவர்கள் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளவேண்டும். சுதந்திரம் சும்மா கிடைக்காது; இருந்தாலும் மன ஒருமைப்பாட்டுடன் ஒற்றுமையாயிருந்து தந்தை செல்வா காட்டிய லட்சியப் பாதையில் சென்று சுதந்திரம் பெறுவோம்" என்று திரு. நடராசா தெரிவித்தார். (மா)

# பாடசாலைச் சிறுமியை கடத்தியவருக்கு றிமாண்ட்

(வேலணை)

அனலைதீவில் அண்மையில் பாடசாலைக்குச் சென்ற 8வயதுச் சிறுமி நகைகளுடன் கடத்திச் செல்லப்பட்டது தொடர்பாக மாங்குளத்தில வைத்துப்பொலிசாரால் கைதுசெய்யப்பட்டபாலசுப்பிரமணியம் என்பவரை ஊர்காவற்றுறைப் பொலிசார் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரி. கே. என். திலகன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இவரை இம் மாதம் 8 ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (வெ)

"விழிப்புப்குழுக்களால்

# கிராமங்களின் 'பாதுகாப்பு பேணப்படவேண்டும்"

(மாவிட்டபுரம்)

திருடர்கள் தொகை கிராமங்கள் தோறும் அதிகரித்து வரும் நிலையில் பொலிசார் மட்டும் கடமை புரிந்து திருட்டுச் சம்பவங்களை ஒழிக்க முடியாது. பொதுமக்களும் திருட்டுக்களை ஒழிக்க முயல வேண்டும். விழிப்புக்குழுக்கள இதற்கு வாய்ப்பான தோர் அமைப்பாக விளங்குகின்றன. கிராமங்கள் தோறும் இவை அமைக்கப்பட்டு கிராமங்களின் பாதுகாப்பு பேணப்படவேண்டும்.

இவ்வாறு வீமன்காமம் வடக்கு கிராமத்தில் விழிப்புக்குழு வொன்றை அங்குரார்ப்பணம் செய்வதற்காக நடைபெற்ற கூட்டத்தில் கலந்துபேசிய காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு.கே. எல். ஹெட்டியாராச்சி கூறினார்.

வீமன்காமம் வடக்கு காந்திஜீ சனசமூகநிலைய மண்டபத்தில் இளைப்பாறிய ஆசிரியர் திரு. நா. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

புலிகள் என்ற நாமத்தை சூட்டிக் கொண்டு இன்று திருடர்கள் பெருகி வருகிறார்கள். மக்கள்தாம்கஷ்டப்பட்டுஉழைக்கும் பணத்தையோ, நகை மற்றும் உடைமைகளையோ பாதுகாப்பாக வைத்திருக்க முடியாதுள்ளது. அத்துடன் வீதிகளிலும் பாதுகாப்பாக நடமாடமுடியாதுள்ளது. ஆகவே மக்களுக்கு பெரும் பிரச்னையாக உள்ள திருடர் தொல்லையை ஒழிக்க பொது மக்களும் பங்கு கொள்ள வேண்டும் பொலிசார் பொது மக்கள் உறவை வளர்த்து குற்றச் செயல்களை ஒழிக்க விழிப்புக்குழுக்கள் பெரிதும் உதவமுடியும்.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எதிரிவிக்கிரமவும் இதில் கலந்துகொண்டார்.

இறுதியில் இக்கிராமத்திற்கான விழிப்புக் குழுவின் ஆரம்பக் கட்டமாக 5 பேர் கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. நா. இராமலிங்கம், இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் திரு. எஸ். குமாரசிங்கம், ஆசிரியர் திரு.சு.கணேசலிங்கம், திரு. நா. சிவராஜசிங்கம், திரு. கி. தாமோதரம்பிள்ளை ஆகியோரே இந்த ஐவருமாவர்.

இக்குழு தொடர்ந்து இயங்கி, மேலும் உறுப்பினர்களைச் சேர்த்து 30 பேர் கொண்ட விழிப்புக்குழுவாக இயங்குவதென முடிவுசெய்யப்பட்டது. (க)


மிகவும் குறைந்த
விசேட
விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
மக்கினொன்ஸ் வழங்குகிறது
★ சிங்கப்பூர் கூட்டாகச் செல்வோருக்கு
(GROUP TICKETS) மிகவும் கூடிய கழிவுடன்
மற்றும் ※ மத்திய கிழக்கு ※ லண்டன்
உலகின் எப்பாகத்துக்கும்
விரும்பிய விமானத்தில்
விமான டிக்கட்
※ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான
எம்மிடம்
வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில்
பிரயாணக் காசோலைகள்
(TRAVELLERS CHEQUES)
நாடுங்கள்
மக்கினொன்ஸ் ட்றவல்
சேவிஸ் (சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154


## 12,000 பேருக்கு தண்டனை குறைப்பு

தெஹ்ரான், ஏப். 1

ஈரானின் புரட்சிவாத நீதிமன்றத்தில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட 12,000 பேருக்கு தண்டனைக் குறைப்பையும், மன்னிப்பையும் ஈரானிய மதத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி அளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

## சந்தேகநபர்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

7000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியையும் கொள்ளையடித்தது தொடர்பாக குப்பிளானைச் சேர்ந்த விசுவலிங்கம் சங்கரலிங்கம் என்பவர் கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில்மீண்டும்ஆஜர்செய்யப்பட்ட சமயம் இவரைப் பிணையில் விடவேண்டுமென அவரது சார்பில் சட்டத்தரணிகள் திருமதி பீரிஸ், கே. விஜயேந்திரா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் கோரினார்.

நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் அவரை 1,000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதித்து விசாரணையை ஜூலை 6ந் திகதிக்கு ஒத்திவைத்தார். (க)

## இந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுப் பிரதிநிதிகளை, யாழ். மாவட்டத்திலுள்ள முக்கியமான ஸ்தலங்களுக்கும் சரித்திரப்பிரசித்திபெற்ற இடங்களுக்கும் அழைத்துச் செல்வதுடன், தமிழரின் பாரம்பரியமான கலாசார நிகழ்ச்சிகளும் நடாத்திக்காண்பிப்பதெனவும் இம்மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டுள்ளது

இதற்கென் மூன்று குழுக்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. வரவேற்பதற்கும், நிதி சேகரிப்பதற்கும், கலாசார நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்வதற்கும் இக்குழுக்கள் பொறுப்பாக இயங்கும்.

இம்மாதம் 26ம் திகதி இரவு யாழ்ப்பாணம் வந்துசேரும் பிரதிநிதிகள் 27ம், 28ம் திகதிகளில் தங்கிநின்று, 29ம் திகதிகளில் கொழும்பு புறப்படுவர்.

இக்குழுக்களுக்கான செயலாளராக யாழ். செயலக நிர்வாகப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழு இன்று மீண்டும் யாழ் செயலகத்தில் கூடவிருக்கிறது. (மா)

## விடுதலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'தமிழினம் அழியாதிருக்க ஒரு தாயகம் வேண்டும் என்று தந்தை செல்வா சொல்லி வைத்தார். காந்தியின் அஹிம்சைவழியில் சிந்திக்காத எங்களை அழைத்து சிந்திக்கவைத்தார். அதுதான் சிறந்த மார்க்கம் என்றும் காட்டினார். ஆனால் இவை எமக்கு வழிகாட்டாதென்று வேறு ஒரு வழியில் செல்ல முனைகிறார்கள். எமக்கு வழிகாட்டும் தலைவர்கள்' தந்தை செல்வா காட்டிய வழியை மறக்காது, தொடர்ந்து சென்று விடுதலைபெற்றுத்தர வேண்டும். அரசாங்கங்களுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள், உடன் படிக்கைகள்செய்த காலம் எல்லாம் போய்விட்டது. புதிதாக ஏதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் சொன்னார்.

(4ம் பக்கம் பார்க்க)

(மா)

கடலில் காணாமல்போன

# மீனவகுடும்பங்களுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்துஉதவி

(யாழ்ப்பாணம்)

சென்ற ஆண்டு ஊர்காவற்றுறைக் கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமற்போன 5 மீனவர்களின் குடும்பத்திற்கு ஜனாதிபதி நிதியிலிருந்து 85 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அம்மீனவ குடும்பங்களுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து உதவியளிக்கப்படவேண்டுமென்று ஊர்காவற்றுறை எம்.பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஜனாதிபதியைக் கேட்டிருந்தார்.

இதற்கான காசோலை யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்படுமென ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கு ஜனாதிபதி அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (கு)

நம்பிக்கை மோசடி வழக்கு:

# எதிரிக்கு 5 வருடம் ஒத்திவைத்த 6 மாதச்சிறை

(மாவிட்டபுரம்)

நம்பிக்கை மோசடி வழக்கு ஒன்றில் குற்றத்தை ஏற்றுக் கொண்டவருக்கு 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்து பெறுவதற்காகக் கொடுக்கப்பட்ட 5025 ரூபா பணத்தை மோசடி செய்ததாகத் தெனியாய என்னுமிடத்தைச் சேர்ந்த பி.முனியாண்டி என்பவர் மீது இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் மேற்படி நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிபதி திரு. சி, வி. விக்னேஸ்வரன் அவருக்கு 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6மாதச்சிறைத் தண்டனை விதித்து இக்கால எல்லைக்குள் குற்றமிழைத்தால் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடுமெனவும் எச்சரிக்கை செய்தார்.

அணு ஆயுதக்குறைப்பு

# அமெரிக்காவுடன் ரஷ்யா பேச்சு நடத்தவேண்டும்

### ஜனாதிபதி றீகன் அறிவிப்பு

வாஷிங்டன், ஏப். 1

அணு ஆயுதக்குறைப்பு பற்றி அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி திரு. றீகன் சோவியத் யூனியனைக் கேட்டுக்கொண்டார்.

வாஷிங்டன் தொலைக்காட்சியில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி றீகன் கோடைகாலத்தில் இப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படலாம் என்றும் தெரிவித்தார்.

அணு ஆயுதத்தைப் பெருமளவு குறைப்பதுதான் தமது நோக்கமென்றும் அவர் கூறினார்.

இராணுவச் செலவை 18 சதவீதம் அதிகரிப்பது பற்றிய தமது திட்டம் பற்றியும் அவர் விளக்கிக் கூறினார். (க)

## மன்னாரில் காலரா அபாயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மீண்டும் காலரா நோய் பரவும் அறிகுறி தென்படுவதால் மக்கள் எல்லோரும் சுகாதார நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டுமெனச் சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள்.

பறப்பாங் கண்டக் கிராமத்தைச் சேர்ந்த மூன்று பெண்களுக்கு காலரா நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் மன்னார் அரசினர் ஆதாரவைத்தியசாலையிலும் இருவர் முருங்கன் அரசினர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். (கு)

## தொண்டமான்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கே காணி கொடுக்கப்பட்டதென்றும், மீதியான குடும்பங்களுக்கு இதுவரை காணி வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் திரு. தொண்டமான் பதிலளித்துப் பேசுகையில், கொழும்பு சென்றதும் இப்பிரச்னைகள் தீர உடன் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (மா)

## நம்பிக்கை நிதிப் பிரிவு

(கொழும்பு)

கிராமோதய சபைகளின் சிறிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்காக நம்பிக்கை நிதிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படவிருக்கிறது. (க)

## ஏர்பூட்டு விழா

(கொழும்பு)

இவ்வாண்டின் ஏர்பூட்டு விழா கோட்டே ஸ்ரீஜெயவர்த்தனபுரத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் விவசாயிகளிடையே நெல்சாகுபடி பற்றிய போட்டிகளும் நடத்தப்படுமென்று விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தியமைச்சின் செயலாளர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார். (வெ)

முன்னாள்

# அமைச்சர் பலர் கைது

டாக்கா, ஏப். 1

பங்களாதேஷில் முன்னாள் பிரதி பிரதமர் அகமட்டும், முன்னாள் அமைச்சர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பல அமைச்சர்களை 24 மணி நேரத்திற்குள் சரணடையுமாறு, நிர்வாக அதிகாரி ஜெனரல் எர்ஷாத் உத்தரவிட்டிருந்தார் முன்னாள் விமானத்துறை அமைச்சர் நூர்கானும் கப்பல்துறை அமைச்சரும் இன்னும் சரணடையவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது பல முன்னாள் அமைச்சர்கள் கைதாகியுள்ளனர். (க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்பிரல் மீ 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. The General P.O. Sri Lanka. Regd. Q. B. 100286/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8126.